**15.03.2020**

**பத்திரிக்கை செய்தி**

**பிற மாவட்டங்களில் உள்ள அரசு மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளைச் சேர்ந்த 285 மாணவ, மாணவியர் மெட்ரோ இரயிலில் கல்விப் பயணம்**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மெட்ரோ இரயில் மற்றும் மெட்ரோ இரயில் நிலையங்களில் உள்ள வசதிகள் மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்து அரசு மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் முயற்சியில் சென்ட்ரல் மெட்ரோவில் இருந்து கோயம்பேடு வழியாக விமான நிலையம் மற்றும் பரங்கிமலை வழித்தடத்திலும் மற்றும் வண்ணாரப்பேட்டையில் இருந்து ஏ.ஜி-டி.எம்.எஸ் வழியாக விமான நிலையம் வரையிலான வழித்தடத்திலும் மெட்ரோ இரயிலில் மாதந்தோறும் கல்விப் பயணம் ஏற்பாடு செய்து அழைத்து செல்லப்படுகின்றனர்.

கல்விப் பயணங்கள் மாதந்தோறும் மேற்கொள்ளப்பட்டு மெட்ரோ இரயிலின் சிறப்பு அம்சங்களை பற்றி மாணவ, மாணவியருக்கு விளக்கப்பட்டு வருகிறது. இதில் சென்னையில் உள்ள அரசு மற்றும் மாநகராட்சிப் பள்ளிகள் மட்டுமின்றி திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவண்ணாமலை மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் உள்ள அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியரும் மெட்ரோ இரயில் கல்வி பயணத்தில் அழைத்து செல்லப்படுகின்றனர்.

இன்று 15.03.2020 (ஞாயிற்றுக்கிழமை) திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியில் உள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளியில் பயிலும் 80 மாணவ, மாணவியர் மெட்ரோ இரயிலில் கல்வி பயணம் அழைத்து செல்லப்பட்டனர். நேற்று 14.03.2020 (சனிக்கிழமை) திருவண்ணாமலை மாவட்டம், சென்னாவத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் பெருகமணியில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் பயிலும் 150 மாணவ, மாணவியர் மெட்ரோ இரயிலில் கல்வி பயணம் அழைத்து செல்லப்பட்டனர். இதுமட்டுமின்றி சென்ற வாரம் 07.03.2020 (சனிக்கிழமை) அன்று திருவள்ளூர் மாவட்டம் பெரம்பூர் எல்லாபுரம் ஒன்றியம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் பயிலும் 55 மாணவ, மாணவியர் மெட்ரோ இரயிலில் கல்வி பயணம் அழைத்து செல்லப்பட்டனர்.

பிற மாவட்டங்களில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர் மெட்ரோ இரயிலில் கல்விப் பயணம் செல்ல கீழ்கண்ட மின்னஞ்சலில் தொடர்புகொள்ளலாம்.

pro@cmrl.in
ampr.cmrl2@gmail.com